## தலைப்பு 298 – அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய தொகுப்பு அறிக்கையில் 2019 மே 31 ஆம் திகதியில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டிற்குரிய தொகைகளுடன் ஒப்பிட்டு சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளன.

(ஆ) அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் அறிக்கை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை 7(ii) ஆம் பிரிவின் பிரகாரம் ஏனைய வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக திரட்டிய வருமானத்தினை வருமானமல்லாத கணக்கின் கீழ் உள்ளடக்காமல் அதனை வரியல்லாத வருமானக் கணக்கின் கீழ் உள்ளடக்கியுள்ளனர். | அரச கணக்கு சுற்றறிக்கையின் படி செயற்படுவதற்கு கவனத்தினை செலுத்துதல் வேண்டும். | எதிர்காலத்தில் சரியான வகைப்படுத்தலின் கீழ் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 31 திசெம்பர் 2018 இல் நிதிநிலைமைக் கூற்றின் படி கட்டுநிதி மீதி ரூபா 10,967,693 ஆகவும் திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் கட்டு நிதி மீதி ரூபா 5,080,770 ஆகவும் காட்டப்பட்டிருந்தன. பொதுக்கணக்கு சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் படி இவ் இரண்டு கணக்குகளிற்கும் இடையிலான வேறுபாடுகளினை இணக்கச் செய்வதற்கு கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த கணக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைகளின் விதிகளுக்கு இணங்க ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எதிர்காலத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும். |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த பொழிப்பு கணக்கில் திறைசேரியிடமிருந்து ரூபா 145,955,637 பெறப்பட்டிருந்தது. எனினும் நிதிச்செயலாற்றல் கூற்றில் திரட்டிய வருமானமாக தொகை ரூபா 152,881,199 ஆக காணப்பட்டன. திறைசேரி ஒப்பந்தத்தின் படி ரூபா 6,925,562 ஆக காட்டப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்குவதற்கு சரியான ஆவணங்களினை திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் |
| (ஈ) | மேலே (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டதன் படி திறைசேரியிடமிருந்து பெறப்பட்டதனை விட நிதிச்செயலாற்றல் கூற்றில் 31 திசெம்பர் 2018 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதிகள் ரூபா 6,925,562 இனால் அதிகரித்து காணப்படுகின்றன. | சரியான முறையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்படவேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். |

### 1.6.2 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றில் ஆதனம் பொறி, இயந்திர உபகரணங்களின் கூட்டு மொத்த பெறுமதி ரூபா 1,151.89 மில்லியனாக காட்டப்பட்டிருந்தன. 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு கணக்கில் நடைமுறை அல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட 03 சொத்துக்களின் கூட்டு மொத்தப் பெறுமதி ரூபா 595,324,560 இனால் நிதிக்கூற்றில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | முன்னைய ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு கணக்கில் காட்டப்பட்ட அனைத்து சொத்து நிலுவைகளினையும் மீளாய்வாண்டின் அனைத்து சொத்து கணக்குகளின் ஆரம்ப மீதியாக கணக்கில் காட்டுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | திணைக்களத்தின் அனைத்து சொத்துக்களின் றுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரபடாமையினால் பெறுமதியானது குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. அனைத்து சொத்துக்களும் இவ்வாண்டு கணக்கில் காட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றன. |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் திறைசேரியின் நிதியிலிருந்து பெறப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்கண்டு கொள்ளமுடியாமல் காணப்பட்டன. மேலும் ஏசிஏ 6 குறிப்பில் காட்டப்பட்டிருந்த சொத்துக்களின் மதிப்பாய்வு தொடர்பான தலைப்பிலுள்ள சொத்துக்களை உறுதிப்படுத்த முடியாமலுள்ளன. | திறைசேரி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் திணைக்கள நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை இனங்கண்டு கொள்வதற்கு தனித்தனி பதிவேட்டினை பராமரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | திறைசேரியின் நிதியம் மற்றும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக தனித்தனியாக நிலையான சொத்துப் பதிவேட்டினை பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பொருத்தமான செயற்திட்டங்கள் எதிர்வரும் காலத்தில் சமர்ப்பிக்கப்படும். |

## 2 நிதி முகாமைத்துவம்

### 2.1 பயன்படுத்தப்படாத ஏற்பாடுகள்/ஒதுக்கீடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 25 மில்லியன் பயன்படுத்தப்படாமல் சேமிப்பாக காணப்பட்டன. | நிதி ஒழுங்கு விதியின் பிரிவின் 50 இன் படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அமைச்சுக்களின் மாற்றங்கள் காரணமாக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவினத்திற்கான உரிய அனுமதிகள் பெறமுடியாமையால் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படாமல் சேமிப்பாக காணப்பட்டன. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் திணைக்களத்தின் கட்டமைப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அவதானிப்புக்களை கருத்தில் கொள்கின்றோம். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வர்த்தகத்தில் பயன்படுத்தப்படுகின்ற அளவீட்டு அலகுகள் மற்றும் நியமங்களுடன் தொடர்டைய உபகரணத்திற்கான அனுமதியை பெற்றுக்கொடுப்பதற்கான ரூபா 1,000,000 வருமான இலக்காக பெற்று கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா. 630,000 மாத்திரமே வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | அடையப்பட வேண்டிய இலக்குக்களை அடைவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2018 சனவரி மாதத்திலிருந்து செப்ரம்பர் வரையான காலப்பகுதியில் 04 பொதிகளை பரிசோதித்து ரூபா 500,000 இனை சேகரித்துக் கொள்ள செயல்திட்ட நடவடிக்கையில் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2018 செப்ரம்பர் 30 ஆம் திகதியில் இரண்டு பொதிகள் மாத்திரமே பரிசோதிக்கப்பட்டு ரூபா. 20,000 வருமானமாக பெறப்பட்டிருந்தன. | வருமான சேகரிப்பு மற்றும் கள ஆய்வுகள் என்பவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் 15,203 போலியான அளவீட்டு அலகுக்கான உபகரணத்தினை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் 787 நபர்களும் நிறுவனங்களும் தகுதியற்ற அளவீட்டு அலகுகளுக்கான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை | நாடாளவிய ரீதியாக வர்த்தக கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் 2019 மே 31 ஆம் திகதி வரை வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய கவனம் செலுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குக்களை திணைக்களம் அடையாளம் கண்டு கொண்டுள்ள போதிலும் தரவுகளை சேகரிப்பதற்கான திட்மிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான தரவுகளை சேகரிப்பதற்கான செயன்முறைகளை விரைவுபடுத்துவதலில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 5 நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்கான உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வாளரை நியமிப்பதற்கு தவறியிருந்தது. | அங்கீகாரிக்கப்பட்ட பதவிக்கான உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற கணக்காளரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 சனவரி 28 ஆம் திகதிய டிஎம்எ/2009(I)(i) ஆம் இலக்க கணக்காய்வு முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நிறுவதற்கு கவனம் செலுத்துவேன். | உள்ளக கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் நடைபெறவிருக்கின்றது. |

## 6 மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இன் 13.3 பந்தியின் பிரகாரம் நிரந்த நியமனமொன்று செய்யப்படும் வரையில் தற்காலிக நடவடிக்கையாக மட்டுமே பதில் நியமிப்புச் செய்யப்படல் வேண்டும்.முழு நேரம் வேலை செய்யும் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை அப்பதவிக்கு நிரந்தர நியமனமொன்றைச் செய்தல் வேண்டும். 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 06/97 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் படி அதிகபட்சம் மூன்று மாத காலங்களுக்குட்பட்டதாக காணப்பட வேண்டும். எனினும் திணைக்களத்தின் பிரதான பதவியான பணிப்பாளர் பதவிக்கு ஒய்வு பெற்ற பணிப்பாளரே 2009 மே 14 ஆம் ஓய்வு பெற்று திகதியிலிருந்து வெற்றிடத்திற்கு பதில் கடமை அடிப்படையில் 2018 திசெம்பர் 31ஆம் திகதி வரை 09 வருடங்களாக நியமிக்கப்பட்டிருந்தன. | தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இன் 13.3 பந்தியின் மற்றும் 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 06/97 இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | அமைச்சுக்களினால் விண்ணப்பங்கள் ஆட்சேர்பு செய்யப்படுகின்றன. |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட 19 சிரேஸ்ட மட்ட பதவிகளில் 06 வெற்றிடங்களுக்கு மதிப்பாய்வு செய்யப்பட்டு மீளாய்வாண்டு இறுதிக்குள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் சிரேஸ்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) நியமிப்பதற்கு பொது நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தன. |
| (இ) | நிர்வாக உத்தியோகத்தர் தொடர்பாக காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்களை பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டு அக்கடமைகள் நிறைவேற்றப்பட்டன. இருப்பினும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பொது நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடம் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கான வெற்றிடங்களை |

| | |
|---|---|
| திணைக்கள நிர்வாகத்தினை சுமூகமான முறையில் தொடர்ச்சியாக கொண்டு நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிரப்புவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளன. |